# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - கருமாணிக்கம்
## ஆழ்வார் தமது அநந்யார்ஹஶேஷத்வத்தை, தோழி மணவிலக்குக்காகத் தாய்மாரோடு கூறும் பாசுரத்தாலே அருளிச் செய்தல்

** கரு மாணிக்க மலை மேல் * மணித் தடம்
தாமரைக் காடுகள் போல் *
திரு மார்வு வாய் கண் கை * உந்தி கால் உடை
ஆடைகள் செய்ய பிரான் **
திருமால் எம்மான் செழு நீர் வயல் *
குட்டநட்டுத் திருப்புலியூர் *
அரு மாயன் பேர் அன்றிப் பேச்சு இலள் *
அன்னைமீர் இதற்கு என் செய்கேனோ? 1

அன்னைமீர் இதற்கு என் செய்கேன்? *
அணிமேருவின் மீது உலவும் *
துன்னு சூழ் சுடர் ஞாயிறும் *
அன்றியும் பல் சுடர்களும் போல் **
மின்னு நீள் முடி ஆரம் * பல்கலன்
தான் உடை எம்பெருமான் *
புன்னை அம்பொழில் சூழ் *
திருப்புலியூர் புகழும் இவளே 2

புகழும் இவள் நின்று இராப் பகல் *
பொரு நீர்க் கடல் தீப்பட்டு எங்கும் *
திகழும் எரியொடு செல்வது ஒப்பச் *
செழுங்கதிர் ஆழி முதல் **
புகழும் பொரு படை ஏந்திப் * போர்
புக்கு அசுரரைப் பொன்றுவித்தான் *
திகழு மணி நெடு மாட நீடு *
திருப்புலியூர் வளமே 3

ஊர் வளம் கிளர் சோலையும் *
கரும்பும் பெருஞ்செந்நெலும் சூழ்ந்து *
ஏர் வளம் கிளர் தண் பணைக் *
குட்டநட்டுத் திருப்புலியூர் **
சீர் வளம் கிளர் மூவுலகு உண்டு உமிழ் *
தேவ பிரான் *
பேர் வளம் கிளர்ந்தன்றிப் பேச்சு இலள் *
இன்று இப்புனையிழையே 4

புனை இழைகள் அணிவும் *
ஆடை உடையும் புதுக்கணிப்பும் *
நினையும் நீர்மையது அன்று * இவட்கு இது
நின்று நினைக்கப் புக்கால் **
சுனையினுள் தடந்தாமரை
மலரும் * தண் திருப்புலியூர் *
முனைவன் மூவுலகு ஆளி * அப்பன்
திருவருள் மூழ்கினளே 5

திருவருள் மூழ்கி வைகலும் *
செழு நீர் நிறக் கண்ணபிரான் *
திருவருள்களும் சேர்ந்தமைக்கு *
அடையாளம் திருந்த உள **
திருவருள் அருளால் * அவன் சென்று
சேர் தண் திருப்புலியூர் *
திருவருள் கமுகு ஒண் பழத்தது *
மெல்லியல் செவ்விதழே 6

மெல் இலைச் செல்வ வண்கொடிப் புல்க *
வீங்கு இளந்தாள் கமுகின் *
மல் இலை மடல் வாழை * ஈன்கனி
சூழ்ந்து மணம் கமழந்து **
புல் இலைத் தெங்கினூடு * கால் உலவும்
தண் திருப்புலியூர் *
மல்லல் அம்செல்வக் கண்ணன் தாள்
அடைந்தாள் * இம்மடவரலே 7

மடவரல் அன்னைமீர்கட்கு * என் சொல்லிச்
சொல்லுகேன்? * மல்லைச் செல்வ
வடமொழி மறை வாணர் * வேள்வியுள்
நெய் அழல் வான்புகை போய் **
திட விசும்பில் அமரர் நாட்டை
மறைக்கும் * தண் திருப்புலியூர் *
பட அரவணையான் தன் நாமம்
அல்லால் * பரவாள் இவளே 8

பரவாள் இவள் நின்று இராப் பகல் *
பனி நீர் நிறக் கண்ண பிரான் *
விரவார் இசை மறை வேதியர் ஒலி *
வேலையின் நின்று ஒலிப்ப **
கரவார் தடந்தொறும் தாமரைக்
கயம் * தீவிகை நின்று அலரும் *
புரவார் கழனிகள் சூழ் *
திருப்புலியூர்ப் புகழ் அன்றி மற்றே 9

அன்றி மற்றோர் உபாயம் என்? * இவள்
அந்தண் துழாய் கமழ்தல் *
குன்ற மா மணி மாட மாளிகைக் *
கோலக் குழாங்கள் மல்கி **
தென்திசைத் திலதம் புரை *
குட்டநட்டுத் திருப்புலியூர் *
நின்ற மாயப் பிரான் திருவருளாம் *
இவள் நேர்ப்பட்டதே 10

** நேர்ப்பட்ட நிறை மூவுலகுக்கும் *
நாயகன் தன் அடிமை *
நேர்ப்பட்ட தொண்டர் தொண்டர்
தொண்டர் * தொண்டன் சடகோபன் ** சொல்
நேர்ப்பட்ட தமிழ் மாலை * ஆயிரத்துள்
இவை பத்தும்
நேர்ப்பட்டார் அவர் * நேர்ப்பட்டார் *
நெடுமாற்கு அடிமை செய்யவே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---